# பாரதியார் கட்டுரைகளில் ஆளுமை வெளிப்பாடு

**மு.கயல்விழி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

**முனைவர்.திருமதி.மு.ஞானத்தாய்**
*இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவி*
*முனைவர்பட்ட ஆய்வு நெறியாளர்*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

## முன்னுரை

பாரதியார் பன்முக ஆளுமைத் திறன் கொண்டவர். தமிழ் இலக்கிய உலகில் தனக்கு முன்னும் பின்னும் ஈடுசெய்யவியலாத இடத்தைப் பெற்றவர். இணையில்லா இலக்கியத் திறன் வாய்ந்தவர். தமிழ்கூறும் நல்லுலகு இன்று அவரை உச்சி மேற்கொண்டு பாராட்டுகின்றது. ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் போற்றப்படவுமில்லை, பாராட்டப்படவுமில்லை. ஒரு படைப்பாளியின் படைப்புகளே அவரின் இலக்கியத் திறனை நிர்ணயிக்கும் சான்றாகும். பாரதியின் கட்டுரைகள் அவருள் இருந்த ஆளுமைத் திறன்களை மதிப்பிடும் உரைக்கல்லாய்த் திகழ்கின்றன. அவை படிக்க சுவைமிகுந்தன,கற்றோர் காமுறத் தக்கன, பயன் மிகு தருவன, அக்கால நிலையைப் படம் பிடித்துக்காட்டுவன.

"உள்ளத்தில் ஒளி உண்டானால், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்பது பாரதியின் வாக்கு. பாரதி உள்ள ஒளி மிக்கவர். அவரின் உள்ளத்தில் தோன்றிய ஒளி அவரது படைப்புகள் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. அவரின் படைப்புகளை ஆய்ந்தோய்ந்தறிவர் எளிதில் இதை உணர்வர். அவரின் அளுமைத் திறன்களை வெளிக்காட்டி நிற்கும் அவரின் கட்டுரைகள் நெடுங்காலம் ஆராயப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வந்தன. தற்காலச் சூழலில் அவற்றை ஆராய்வது சாலவும் பயனுடைத்து.

## பாரதியின் ஆளுமைப் பண்புகள்

ஆளுமை (Personality) என்பது ஒரு மனிதனின் உள்ளார்ந்த தனித்திறன்களின் தொகுப்பாகும். அது தேவைப்படும்போது படைப்பாளியிடம் வெளிப்பட்டு நிற்கும். உலகின் சிறந்த படைப்பாளிகள் அனைவரும் ஆளுமைத்திறன் கொண்டவர்களே. பாரதியின் படைப்புகள் அனைத்திலும் அவரின் பன்முகத்திறன், அதாவது ஆளுமை குணம் வெளிப்பட்டு நிற்கின்றது. அவரின் உள்ளத்தில் பொங்கி எழுந்த புரட்சிக் கருத்துக்கள் யாவும் இலக்கியப் படைப்புகளாக வெளிப்பட்டு மிளிர்ந்தன. அவரிடம் இருந்த சிறந்த கல்வித் திறன், ஆழ்ந்த அறிவு, விரிந்த ஆற்றல், நுண்மான் நுழைபுலம், எதிர்காலத்தை உய்துணரும் திறன் அவரின் படைப்புகளில் குறிப்பாக கட்டுரைகளில் வெளிப்பட்டு நிற்கின்றன. இவை பாரதி எத்துணைப் புரட்சியாளராக, சிந்தனைவாதியாக, சீர்திருத்த வாதியாக, தீர்கதரிசியாக, தன் காலத்தை விஞ்சி நிற்போராக வாழ்ந்தார் என்பதற்குச் சாட்சிகளாய் திகழ்ந்து வருகின்றன.

## பாரதியின் கட்டுரைகள்

கட்டுரை (Essay) என்ற இலக்கிய உத்தி கவிதையை விட படிப்பதற்கு எளிதானது, பாமரனையும் எளிதில் சென்றடையக்கூடியது. கவிதைகள் மூலம் எளிதில் கூறவியலாச் செய்திகள் அனைத்தையும் கட்டுரைகள் மூலம் கூறமுடியும். எல்லாவகை இலக்கிய உத்திகளையும் (ஊடகங்களை) விட கட்டுரை மிகு பயன்தரத்தக்கதாகும். மேல்நாடுகளில் கட்டுரையியல் துறை (Essayism) என்ற ஓர் இலக்கியத் துறை சிறப்பாக செயல்பட்டதை ஈண்டு எண்ணிப்பார்க்கலாம். சான்றாக சர் ஜோசப் அடிசன் (Sir Josep Adision), எட்மண்ட் பர்க் (Edmund Burk), சார்லஸ் லேம்ப் (Charles Lamp), வில்லியம் ஹேஸ்லிட் (William Hazlitt), தாமஸ் டி குவின்சி (Thomas de Quincey), ஜான் ரஸ்கின் (John Ruskin), டாக்டர் சாமுவேல் ஜான்சன் (Dr Samuel Johnson), ஸ்டீபன் ஸ்பென்சர் (Stephen Spencer) போன்ற ஆங்கிலக் கட்டுரையாளர்களை இன்றும் உலகம் போற்றுவதை நாம் மறந்துவிடலாகாது. பாரதியும் பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு இதழ்களில், பல்வேறு புனைப் பெயர்களில் (ஷெல்லிதாசன், சக்திதாசன்

போன்றவை) கட்டுரைகள் எழுதினார். ஆனால் அவரது கவிதைகள் பெற்ற சிறப்பு கட்டுரைகள் பெறாமல் போனது. பாரதியும் தன் கவிதை நூல்களைப் பதிப்பித்துப் பாதுகாக்க முனைந்தாரேயன்றி, தம் கட்டுரைகளை நூலாக தொகுத்துப் பாதுகாக்க யாதொரு முயற்சியும் செய்யாமல் போனது தமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும்.

ஒரு இலக்கியவாதி தான் வாழ்ந்த காலத்தில் பெருமைபடுத்தப்பட்டால் அவன் ஆக்கமும், ஊக்கமும், உற்சாகமும் அடைவான். இவற்றால் உந்தப்பட்டு அவன் பல புத்திலக்கியங்களைப் படைக்கக்கூடும். சான்றாக மேல்நாட்டுக் கவிராயர்களான ஜான் மில்டன் (John Milton), வில்லியம் பிளேக் (William Blake), அலேக்சாண்டர் போப் (Alexander Pope), ஷெல்லி (Percy Bysshe Shelley), கீட்ஸ் (John Keats), பைரன் பிரபு (George Gordon Byron), வேட்ஸ்வொர்த் (William Wordsworth), கோல்ரிஜ் (Samuel Taylor Coleridge), லாரன்ஸ் (David Herbert Lawrence) போன்றோர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் போற்றிப் புகழப்பட்டதுடன், பாராட்டி பெருமை படுத்தப்பட்டனர். ஆனால் நம் நாட்டு பாரதி அவர் வாழ்ந்த காலத்தில் அவரைப்பற்றி எண்ணிப்பார்க்க ஒருவரும் இராது போயினர். ஏமாற்றமும், வருமையும், துன்பமும், நோயும் பல கவிஞர்களின் அகால மரணத்திற்கு காரணமாய் அமைந்ததற்கு பாரதியின் வாழ்க்கை சாலச்சிறந்த எடுத்துக்காட்டு. அன்று முதல் இன்றுவரை ஆங்கில நாடகமேதை ஷேக்ஸ்பியரைக் (William Shakespeare) கொண்டாடாத ஆங்கிலேயர் இல்லை. ஆனால் திருக்குறளையும், திருவள்ளுவரையும் அறியாத இலட்சக்காணக்கான தமிழர்கள் இன்றும் நம் நாட்டில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். பாரதியை அக்காலத்தில் முறையாகப் போற்றி சிறப்பித்திருந்தால் அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து தமிழுக்கு அமர இலக்கியங்கள் வழங்கியிருக்கக் கூடும்.

பாரதி பன்முக இலக்கியத்திறன் கொண்டவர். கவிஞர் (Poet), கட்டுரையாளர் (Essayist), சிறுகதை ஆசிரியர் (Short Story Writer), புதின எழுத்தாளர் (Novalist), பயண இலக்கியவாதி (Travel Writer), சிறுவர் எழுத்தாளர் (Children Writer), சித்திர எழுத்தாளர் (Cartoonist), பத்திரிக்கை ஆசிரியர் (Editor), இலக்கிய விமரிசகர் (Literary Critic), கலை விமரிசகர் (Artistic Critic), அரசியல் விமரிசகர் (Polatical Critic),மொழி பெயர்ப்பாளர் (Translator) என்று அவரின் பன்முக இலக்கியத் திறன் விரிந்து கொண்டு செல்கிறது. இவரைப் போன்று பன்மொழிகள் கற்ற, பன்முகத்திறன்கள் கொண்ட இலக்கியவாதியை இந்திய இலக்கிய உலகில் காண்பதறிது. இந்திய அளவில் வங்கக் கவியரசரான இரவீந்திரநாத் தாகூரை (Ravindranath Tagore) மட்டும் பாரதிக்கு ஈடாகக் கொள்ளலாம். அவர் கையாளாத இலக்கியத் துறைகளே இல்லை. அவர் சாதிக்காத இலக்கிய உத்திகளே இல்லை. அவர் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் கட்டுரைகள் தீட்டுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

ஒரு இலக்கியவாதியின் படைப்புகள் காலத்தை வென்று நிற்க வேண்டுமென்றால் அது தரத்திலும், சிறப்பிலும், கருத்திலும், வடிவத்திலும், மேம்பட்டு நிற்க வேண்டும். மேலும் அது எல்லாக் காலத்திற்கும் ஏற்றதாக அமைய வேண்டும். பாரதியின் கட்டுரைகள் இவ்வகையைச் சார்ந்தவையே. தமிழ் இலக்கிய உலகில் அவரின் இலக்கியத் திறனுக்கு ஈடான ஒருவரைக் காண்பதறிது.ஒரு வகையில்பார்த்தால் வங்க கவியரசர் இரவீந்திரநாத் தாகூருக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பான எதிர்காலத்தை உய்துணரும் ஆற்றல் (Prediction) பாரதியிடம் இருந்தது. இதனால்தான் தமிழகத்தில் தோன்றிய பல சீர்திருத்த இயக்கங்களுக்கு பாரதி முன்னோடியாகத் திகழ முடிந்தது. தவிர நம் நாட்டு பகுத்தறிவு இயக்கங்கள் (Rational Movements) யாவற்றுக்கும் அவரே வழிகாட்டியாகத் திகழ்ந்தார். பொதுவில் அவர் தான் வாழ்ந்த காலத்தை விஞ்சியவராக வாழ்ந்து மறைந்தார்.

பாரதியின் கவிதைகள் கிடைத்த அளவு அவரின் கட்டுரைகள் எளிதில் கிடைத்துவிட வில்லை. அவை அக்கால இதழ்கள் பலவற்றில் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டன. தன் கட்டுரைகளை நூலாய் தொகுத்து வெளியிட்டு அவற்றை நன்முறையில் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவரிடத்து இல்லை. அதற்குப் போதிய நேரமும், உரிய நிதியும் அவரிடம் இல்லை. அவர் வாழ்ந்த காலத்தில் அவரின் அபிமானிகளாலும் அவை முயன்று தொகுக்கப்படவுமில்லை. எனவே அவை பல்வேறு இடங்களில் ஒருவரும் அறியாவண்ணம் மறைந்து கிடந்தன. நாட்டின் சுதந்திரத்திற்கு பின் ஆய்வாளர்கள் அறிதின் முயன்று பெரும்பான்மையான கட்டுரைகளைத் தேடிக் கண்டெடுத்தனர். சுமார் 1500க்கும் மேற்பட்ட கட்டுரைகளை அவர் எழுதியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் சில கட்டுரைகள் பழைய ஏடுகளோடு மக்கி எவரும் அறியாவண்ணம் மறைந்து போனது தமிழுலகுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

பாரதி வாழ்ந்த காலம் நம் நாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலம். மக்கள் விலங்குகள் போல் நடத்தப்பட்டக் காலம். மூடநம்பிக்கையும், பழமைவாதமும், பிற்போக்கு குணமும், சந்தற்பவாதமும், சுயநலமும் நாடு முழுவதும் தலைவிரித்தாடியது. அதே சமயம் ஆங்கிலக் கல்வியும், மேல் நாட்டுக் கலாச்சாரமும் வேகமாகப் பரவியது. ஆங்கிலேயரை நன்கு அறிந்த,ஆங்கிலக் கல்வி நன்கு பயின்ற பாரதியார் ஆங்கிலேயரிடம் இருந்த சுதந்திர உணர்ச்சியுடன் திகழ்ந்தார். கடையத்திலிருந்து சென்னைக்குப் புரட்சிக் கோலம்பூண்டு சாதிக்க வந்தாார். ஆனால் துரதிஷ்டவசமாய் சென்னையில் பல்வேறு இடர்கள், துன்பங்கள், வேதனைகள், வலிகள், பிணிகள், வறுமை போன்றவற்றுக்கு இடையே உழன்றார். “துன்பமும் நோயும் உன்னடியார்கோ?” என்று அவர் பாடிய பாடல் அவர் வாழ்ந்த துன்ப வாழ்க்கைக்குச் சாலச்சிறந்த சான்று. இத்துணை இடர்பாடுகளுக்கிடையில் பல்துறை சார்ந்த கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அவை ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி நம் நாட்டு பழமைவாதிகளுக்கும் எரிச்சலையும், ஆத்திரத்தையும் மூட்டின. எதைக் கண்டும் அஞ்சாமல் தான் என்ணிய கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிட்டார். காலத்தை விஞ்சிய அவரது கருத்துக்களால் அவர் சார்ந்த சமூகத்தாலும்,அவரின் உறவுகளாலும் ஒதுக்கி வைக்கப்பட்டார்.

பாரதியார் நாட்டு விடுதலை, தேசப்பற்று, பெண் கல்வி, கைம்பெண் நிலை, சாதிக் கொடுமைகள், தீண்டாமை, மாதர் முன்னேற்றம், சமூக ஒற்றுமை, தொழில் வளர்ச்சி, மொழிப்பற்று, பழம்பெருமை, கலை, சமயம் மற்றும் தத்துவம் சார்ந்தததுறைகளில் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். இவ்வாறு வெளிவந்த கட்டுரைகள் அவருக்கு அத்துறையிலிருந்த ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தின. பாரதி வாழ்த்த காலம் சமூகப் புரட்சிகள் தோன்றாக் காலம். ஆனாலும் எவருக்கும் அஞ்சாமல் தான் நினைத்தக் கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிட்டார். இவ்வரிய முயற்சி தமிழ்கூறு நல்லுலகிற்குப் புத்துணர்ச்சியை ஊட்டி,புது வழிக்கு, புரட்சிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

பாரதியின் கட்டுரைகள் பல்வேறு அறிஞர்களால், பல்வேறு காலகட்டங்களில் தேடிக் கண்டெடுக்கப்பட்டன. கடும் முயற்சிக்கு பின் அவை வெளியுலகு கண்டன. இதற்கு முதல் முயற்சி செய்தவர் தமிழறிஞர் திரு பெரியசாமி தூரன் ஆவார். இவர் அறிதின் முயன்று பாரதியின் கட்டுரைகளைத் தொகுத்து கி.பி.1953ல் “பாதியின் கட்டுரைகள்” என்ற நூலாய் வெளியிட்டார். அதன்பின் திரு. இரா. ஆ. பத்மநாபன் என்பவர் “பாரதி புதையல்” என்ற நூலை கி.பி.1958ல் வெளியிட்டார். திரு. இளசை மணியன் என்பவரும் பாரதின் கட்டுரைகளைத் தொகுத்து “பாரதி தரிசனம்” என்று நூலாய் கி.பி.1962ல் வெளியிட்டார். திரு. சீனி விஸ்வநாதன் என்பவர் பாரதியின் கட்டுரைகளை “பாரதி கட்டுரைக் களஞ்சியம்” என்ற நூலாய் கி.பி.1992ல் கால வரிசையுடன் வெளியிட்டார். இவ்வாறு பாரதியின் கட்டுரைகள் கால வரிசைப்படியும், வகைமை நோக்கிலும் தொகுத்து வெளியிடப்பட்டன.

பாரதியார் தன் கட்டுரைகளை கீழ்கண்ட செய்தித்தாள்களில் வெவ்வேறு கால கட்டத்தில் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார்:-

1. விவேக பானு (மதுரை)
2. சுதேசமித்திரன் (சென்னை)
3. சக்கரவர்த்தினி (சென்னை)
4. இந்தியா (சென்னை)
5. விஜயா (புதுவை)
6. கர்மயோகி (புதுவை)
7. சூரியோதயம் (புதுவை)
8. ஞான பானு (சென்னை)
9. கதாரத்னாகரம் (சென்னை)
10. தேசபக்தன் வருஷ அநுபந்தம் (சென்னை)
11. தனவைசிய ஊழியன் (காரைக்குடி)
12. Young India (Chennai)
13. New India (Chennai)
14. The Common Weal (Chennai)
15. Aarya (Pondy)

**பாரதியின் ஆளுமை வெளிப்பாடு**

**1. நாட்டு விடுதலை/தேசப்பற்று**

பாரதி வாழ்ந்த காலம் சுதந்திரப் போராட்டம் எழுச்சிப் பெற்ற காலமாகும். இயல்பாகவே சுதந்திர உணர்ச்சிகொண்ட பாரதியார் தன் கட்டுரைகளில் அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்தினார். பாரதி ஒரு தீவிர காங்கிரஸ்வாதி, திலகரின் வழியில் வந்தவர், தீவிரவாதப் பிரிவைச் சார்ந்தவர். வ.உ.சி, அரவிந்தர், வ.வே.சு ஐயர் போன்ற தேசத்தலைவர்களின் உற்ற நண்பர். போராட்டங்கள் மூலமாக மட்டுமே சுதந்திரம் அடையவியலும் என்று நம்பினார். பிற நாடுகளில் தோன்றிய சுதந்திர இயக்கங்களை வரவேற்றார். ஆங்கிலேயரிடம் விண்ணப்பங்களை அனுப்பி, கெஞ்சிக் கூத்தாடி சுதந்திரம் அடைய வேண்டும் என்ற அக்காலச் சென்னை மிதவாதக்காங்கிரஸ் வழக்கறிஞர்களை கொடிய விஷம் போல் வெறுத்தார்.

தம் கட்டுரைகள் வாயிலாக அவர்களை எள்ளி நகையாடினார். அக்கால உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நிலவரங்களை நன்கு பத்ரிக்கைகளில் விவாதித்தார். ஆங்கிலேயரின் அடக்கு முறைக்கு அஞ்சாமல் தான் எண்ணியக் கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிட்டார். தேச விடுதலைப் போரில் நாட்டு மக்கள் அடைந்த துன்பங்களைக் கண்டு மனம் வருந்தினார். அரசியல் மற்றும் நாட்டுப்பற்று குறித்து பாரதி பல்வேறு காலகட்டங்களில் எழுதியக் கட்டுரைகள் பின்வருமாறு:-

1. வந்தே மாதரம்
2. தாதாபாய் நௌரோஜி
3. காங்கிரஸ்
4. தூத்துக்குடியில் சுதேசியம்
5. சுதேசநிதி
6. திலகரின் உபதேசம்
7. இந்திய காங்கிரஸ் மகாசபை
8. சுத்த தேசியம்
9. இந்திய ஸ்வராஜிய சங்கம்
10. பரங்கியரின் கா்வம்

## 2. பெண் கல்வி

பாரதி வாழ்ந்த காலத்தில் பெண் கல்வி எட்டாக் கனியாகத் திகழ்ந்தது. தமிழ்ச் சமுதாயம் மிகவும் பிற்போக்குத் தன்மையுடன் திகழ்ந்தது. பெண்டிர் குழந்தைகள் பெறுவதற்க்கும், வீட்டுவேலைகள் செய்வதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டனர். பாரதி தன் இரு மகள்களையும் பள்ளி அனுப்பிக் கல்வி கற்கச் ஆசைப்பட்டார். ஆனால் அதற்கானவாய்ப்பு அவருக்கு கிட்டவில்லை. இந்நிகழ்வு அவருடைய உள்ளத்தில் ஆழ்ந்த வடுவாக அமைந்தது. விவேகானந்தரின் சீடரான நிவேதிதா அம்மையாரை (Sister Nivedita) தன் குருவாக கொண்ட அவா் அவரைப் போன்றே நம் நாட்டு பெண்கள் கல்வி கற்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். அவா் சார்ந்த பிராமண சமுதாயம் பெண் கல்விக்கு மிகப்பெரும் தடைக்கல்லாக இருந்தது. பாரதி தன் கட்டுரைகளில் ஆணுக்குப் பெண் சமம் என்றும், ஆணுக்கு வழங்கப்படும் கல்வி பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். கல்வி அறிவு மட்டுமே பெண்களை ஆண்களுக்கு சரி சமமாக உயர்த்தும் என்று கருதினார். பெண் கல்வி குறித்து கீழ் கண்ட கட்டுரைகளை பாரதி எழுதினார்:-

1. பெண்கள் சா்வகலா சங்கம்.
2. மாதா் கடமைகளும் மேன்மையும்.
3. பெண் விடுதலை

## 3. மாதா் முன்னேற்றம்

சமுதாயத்தில் பெண்கள் உயா்வாக மதிக்கப்பட வேண்டும் என்று கருதியவா் பாரதி. தன் மனைவி செல்லம்மாளுக்கு முழுச் சுதந்திரம் வழங்கி தன் வாழ்வில் அதை செயலில் காட்டினார். அக்காலத்தில் இளமைத் திருமணமும், கைம்பெண் கொடுமைகளும் சமுதாயத்தில் மலிந்திருந்தன. இதனைக் கண்ட பாரதி மனம் நொந்து இந்த அவலங்கள் மறைய ஆசைப்பட்டார். மேல்நாட்டுச் சமுதாயத்தில் இக்கொடுமைகள் இராமையால் நம் சமுதாயமும் அதைப் போன்று இருக்க வேண்டுமென்று எண்ணினார். இதன் மூலம் மாதா் முன்னேற்றத்திற்கு உழைத்த முன்னோடிச் சீா்திருத்தவாதி என்ற நற்பெயரையும் பெற்றார். மாதா் முன்னேற்றம் குறித்து கீழ் கண்ட கட்டுரைகளை எழுதினார்:-

1. சகோதரி நிவேதிதா.
2. இந்து ஸ்திரிகளின் சங்கம்
3. வீரத் தாய்மார்கள்
4. இராணி இலட்சுமி பாய்
5. பாரதக் குமாரிகள்
6. அன்னி பெசண்ட்
7. பெண் விடுதலை
8. இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலை
9. மாதர்களின் சுதந்திரங்கள்
10. நமது ஸ்ரீகள்

## தீண்டாமை ஒழிப்பு

பாரதி வாழ்ந்த காலத்தில் தீண்டாமைக் கொடுமை பரவலாகக் காணப்பட்டது. ஜாதிக் கொடுமைகள் மலிந்திருந்தன. தீண்டாமைக் கொடுமையை கடுமையாக எதிர்த்தவா் பாரதியார். நாடு விடுதலை அடைவதற்குத் தீண்டாமை தடைக்கல்லாக இருப்பது கண்டு மனம் நொந்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தில் சரி நிகராய் வாழ வேண்டும் என்று பல கட்டுரைகள் தீட்டினார். விடுதலைப் போரில் வெல்ல வேண்டுமென்றால் அவா்கள் உதவி தேவை என்று அறிவித்துப் பல கட்டுரைகள் புனைந்தார். தமிழகத்தில் தோன்றிய பல சமுக சீா்திருத்தவாதிகளுக்குப் பாரதியே முன்னோடி. தீண்டாமை குறித்து கீழ் கண்ட கட்டுரைகளில் எழுதியுள்ளார்:-

1. பறையா்
2. ஜாதிக் குழப்பம்
3. தீண்டாதவா்கள்
4. பஞ்சமா்
5. ஜாதிக் குழப்பம்

**5. சமுக சீர்திருத்தம்**

பாரதி வாழ்ந்த காலத்தில் சமதரும சமுதாயக் கருத்துக்கள் வேகமாகப் பரவின. இரஷ்யா போன்ற நாடுகளில் சோஷியலிசக் கருத்துக்கள் பரவி வளர்ந்தன. இக்கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பாரதியார் சமதரும சமுதாயம் இந்தியாவில் மலர வேண்டும் என்று ஆசைப்பட்டார். அக்காலச் சமுதாயம் ஜாதி-பேதங்கள், இருப்பவன்-இல்லாதவன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்று பிளவு பட்டுக் கிடந்தது. இதை ஆங்கிலேயர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு நம்மை அடக்கி ஆண்டனர். பாரதியார் ஏற்ற இறக்கமற்ற சமுதாயம் அடைய வேண்டும் என்று கனவு கண்டார். நவீன சமுதாயம் அமைவதற்கு அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பதற்கு அவரின் கட்டுரைகளேச் சான்று. சமுதாய சீர்திருத்தம் குறித்து பாரதியார்

1. ஆச்சாரத் திருச்சங்கம்
2. குடியானவனுடைய ஸ்திதி
3. நாகரிக வளர்ச்சியில் ஸ்திரிகளுக்குரிய ஸ்தானம்
4. ஆண்களும் பெண்களும் நதியில் சென்று ஸ்தானம் புரிதல்
5. மலையாளத்து நம்பூதிரிக்குள்ளே ஒரு சீர்திருத்தம்
6. சதி தகனம்
7. ஜாதி
8. ஆசாரத் திருத்த மஹாசபை
9. நான்கு வர்ணங்களின் தர்மங்கள்

முதலிய கட்டுரைகளை எழுதினார்.

**6. தமிழ் மொழிப்பற்று**

தாய்மொழியாம் தமிழ் மொழி மீது பாரதி அளவு கடந்த பற்று கொண்டிருந்தார். பன்மொழிகள் கற்ற போதிலும் தமிழ் மொழி மீது அவர் கொண்டிருந்த பற்று கூடியதே தவிர குறையவில்லை. பிறமொழிகளைக் காட்டிலும் தமிழ் மொழி சிறந்து விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். தமிழில் சிந்திக்கவும், தமிழில் பேசவும், தமிழில் எழுதவும் உறுதி பூண்டார். அவர் தமிழைப் பாராட்டத் தயங்கியதேயில்லை. தன் மனைவி செல்லமாளுக்கு அவர் கூறிய அறிவுரை தமிழை நன்கு கற்க வேண்டும் என்பதே. தமிழை யாராகிலும் குறைவுபடுத்தினால் அவர்களைக் கடுமையாகத் தாக்கி எள்ளி நகையாடிக் கட்டுரை புனைந்தார். பிற்காலத்தில் தோன்றிய தனித்தமிழ் இயக்கங்களுக்குப் பாரதி முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ்மொழி குறித்து

1. தமிழ்
2. கன்னித் தமிழ்
3. பத்திரிக்கைத் தமிழ்
4. மதுரைத் தமிழ்ச்சங்கம்
5. தமிழ் வளர்த்தல்
6. தமிழ் பாஷைக்குள்ள குறைகள்
7. தமிழில் எழுத்துக் குறை
8. தென்றலுடன் பிறந்த பாஷை
9. மஹா மஹாபாத்யாய சாமிநாத ஐயர்
10. தமிழில் சாஸ்திரபாஷை

முதலிய கட்டுரைகள் வரைந்தார்.

**7. தத்துவம் மற்றும் சமயம்**

பாரதியார் ஒரு சிறந்த தத்துவ மேதை, ஒப்பற்ற சமயவாதி. அவர் சமய சமரச நோக்கம் கொண்டவர். அனைத்துச் சமய நூல்களையும் ஆழ்ந்து கற்றவர். உலகில் உள்ள சமயங்கள் அனைத்தும் பரம்பொருளை உணர்த்துபவை என்று நம்பியவர். இறைவன் ஒருவனே என்று உறுதியுடன் நம்பினார். இந்து மதத்தை ஆழ்ந்துக் கற்று, வடமொழியில் உள்ள பகவத்கீதைக்கு அழகு தமிழில் உரையெழுதினார். பிற சமயங்களான இஸ்லாம், கிருத்துவ சமயங்கள் குறித்து பல கட்டுரைகள் எழுதினார். ஈசன் ஒருவனே என்றும், பல சமயங்கள் இதையே உணர்த்துகின்றன என்றும் நம்பினார். உருவ வழிபாட்டை ஆதரித்தார். சமய சடங்குகளை வெறுத்தார். இந்தியாவின் பழமை குறித்தும், வேதங்கள், ரிஷிகள் குறித்தும் எப்போதும் பெருமை கொண்டிருந்தார். இந்தியாவின் பழமையை எப்போதும் வெளிப்படுத்த ஆசைப்பட்டார். பழம் கதைகளை பேசிக்கொண்டு பொழுது போக்கும் புல்லர்களை அடியோடு வெறுத்தார். அவரின் கட்டுரைகள் சமய சமதருமத்தைப் போற்றியதையும், இந்து சமயத்தின் பெருமையை எண்ணிப் பெருமிதம் கொள்வதையும் புலப்படுத்தும். சமயம் மற்றும் தத்துவம் குறித்து அவர் எழுதிய பல கட்டுரைகள் சமயத்துறையில் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியது. தத்துவம் மற்றும் சமயம் குறித்து பாரதி

1. ரிஷிகளின் கடன்
2. காளியும், காமனும்
3. கா்மத்தின் பயன்
4. ஆரிய தருமம்
5. ஸ்ரீமத் பகவத்கீதையும், கொடுஞ் செயல்களும்
6. சக்தி தா்மம்
7. ஏசு கிருத்துவின் வார்த்தை
8. வேதம்
9. இந்து தா்மம்
10. ஹிந்து தர்மத்தின் ஜீவ தத்துவங்கள்

முதலிய கட்டுரைகள் எழுதினார்.

**8. தொழில் மற்றும் விவசாய முன்னேற்றம்**

பாரதி உழவையும், தொழிலையும் நாட்டின் இரு கண்களாகக் கருதினார். நாட்டு வளர்ச்சிக்கு இவ்விரண்டும் அடிப்படை என்பது அவரது ஆணித்தரமான துணிபு. சோம்பி சுகமாக வாழ்ந்து, உண்டுக் களித்த அக்காலச் செல்வந்தர்களையும், ஜமீந்தார்களையும், நிலச்சுவாந்தார்களையம், குறுநில மன்னர்களையும், பிரபுக்களையும், அரசு அலுவலர்களையும் அடியோடு வெறுத்தார். உழவர்களையும், கைவினைஞர்களையும், தொழிலாளர்களையும் போற்றினார். மேலை நாடுகளில் உள்ளது போன்று நம் நாட்டில் தொழில் வளம் பெறுக வேண்டுமென்று ஆசைப்பட்டார். கைத்தொழில் பெருகி நாட்டு மக்கள் வளத்துடன் வாழக் கனவு கண்டார். இந்தியர்களின் வறுமை நீங்க வேண்டுமென்றால் தொழில் வளம் பெருக வேண்டுமென்றும், பசியும், பஞ்சமும் நீங்க வேண்டுமென்றால் விவசாயம் செழிக்க வேண்டும் என்றும் கட்டுரைகள் எழுதினர். பொருளாதார மேம்பாடடைய பாரதி கண்ட கனவு பிற்காலத்தில் நனவானதை பாரதம் கண்டது. விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்து பாரதி

1. நெல் சாகுபடி
2. கைத்தொழிற்க் காட்சி
3. தொழில்கள்
4. தொழில்களின் ஒற்றுமை
5. தொழிலாளர் பெருமை
6. தொழிலுக்கும்,செல்வத்துக்கும் உள்ள சம்மந்தம்
7. கைத்தொழில் நெசவு
8. தொழிற் கலாசாலை
9. தொழிலின் பெருமை
10. தொழிலாளருக்குச் சில வார்த்தைகள்

முதலிய கட்டுரைகளை எழுதினர்.

**முடிவுரை**

ஒரு படைப்பாளி தான் எண்ணிய கருத்துகளை வாசகர் எளிதில் உணரும் வண்ணம் செய்வது அவரது வெற்றியாகும். அவ்வாறு படைக்கப்பட்ட இலக்கியங்கள் காலத்தை வென்று நிற்கும். படைப்பாளியின் ஆளுமைப் பண்புகள் அவரின் இலக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும் போழுது அவ்விலக்கியங்கள் அமர இலக்கியங்களாக நிலைபெறுகின்றன. பாரதியின் கட்டுரைகளும் இவ்வகையைச் சார்ந்தவையே. அவரது ஆளுமைப் பண்புகள் முழுவதும் அவரது கட்டுரைகளில் வெளிப்பட்டு விரவி நிற்கின்றன. பல்துறை வித்தகர் பாரதி என்பதற்கு அவரது கட்டுரைகளே சாலச்சிறந்த எடுத்துக்காட்டு. அரசியல், சமயம், சமுகம், பொருளாதாரம்,பண்பாடு, கலாச்சாரம், தத்துவம் மற்றும் கலை போன்ற பல்துறைகளில் அவருக்கிருந்த அறிவாற்றலும், ஆழ்ந்த புலமையும் அவரது கட்டுரைகளில் மிளிர்ந்தன. பாரதியின் பெருமிதம், கோபம், வெறுப்பு, ஆசை, இலட்சியம். கனவு போன்ற பற்குணங்கள் அவரது கட்டுரைகளில் வெளிப்பட்டன.

நாட்டுக்காக உழைத்த எத்தனையோ தலைவர்களில் பாரதியாரும் ஒருவர்தான் என்றாலும் அவர் வாழ்ந்த குறுகிய காலத்தில் அவர் புரிந்த சாதனைகளை எண்ணிப்பார்கையில் மற்ற எல்லோரையும் அவர் விஞ்சி நிற்கின்றார். தன்னுடைய ஆசைகளையும், இலட்சியங்களையும், கனவுகளையும் வெளிப்படுத்தும் ஊடகமாக தன் படைப்புகளை அவர் பயன்படுத்திக்கொண்டார். வாழ்க்கை என்ற பள்ளியில் தான் பயின்ற பாடங்களையும், பெற்ற பட்டறிவையும், அடைந்த படிப்பினைகளையும், சந்தித்த கசப்பான அனுபவங்களையும் தன்னுடைய கட்டுரைகள் வாயிலாக வெளிப்படுத்தினார். நம் நாட்டில் பாரதி போன்ற யுகபுருஷர்கள் தோன்றுவது மிகவும் அபூர்வம். நம்முடைய காலத்தைச் சார்ந்த இந்த மாபெரும் யுகபுருஷரின் ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்தும் உன்னதக் கருவியாய்,கண்ணாடியாய், துலாக்கோலாய் அவர் வரைந்த கட்டுரைகள் திகழ்ந்து, காலத்தை வென்றுஅமரத்துவம் பெற்று நிற்கின்றன.

**கருவிநூற் பட்டியல்**

1. இளசை மணியன், பாரதி தரிசனம், NCBH, சென்னை, 1975
2. பத்மநாபன்.ரா.ஆ, பாரதி புதையல், சென்னை,1958
3. சீனி விஸ்வநாதன், பாரதி கட்டுரைக் களஞ்சியம், சென்னை, 1992
4. பெரியசாமித் தூரன், பாரதி வசனத்திரட்டு, நேஷ்னல் புக் டிரஸ்ட், புதுடெல்லி, 1978
5. ஜெயகாந்தன் & சிற்பி. பாலசுப்பிரமணியன், மகாகவி பாரதியார் கட்டுரைகள், சாகித்திய அகாதமி, புதுடெல்லி, 2002.